



தாராபுரம் நகரத்திற்கு உட்பட்ட கொளிஞ்சிவாடி, நகராட்சி அலுவலகப் பகுதி, தேவேந்திரா தெரு, சின்னக்காளியம்மன் கோவில் பகுதி, சித்தராவுத்தன்பாளையம், பெரியகாளியம்மன் கோவில் உள்ளிட்ட பகுதிகளில் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ். சுகன்யாவுக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மு.பெ. சாமிநாதன், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் வலியுறுத்தி வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்நிகழ்வுகளில் திருச்சி கிழக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், திருச்சி தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ், மாவட்டப் பொருளாளர் குணசேகரன், தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் முருகானந்தம், திருச்சி தெற்கு மாவட்டப் பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், பொதுக்குழு உறுப்பினர் கே.கே.கே. கார்த்தி, நகரக் கழகச் செயலாளர் மு.மா. செல்வம், ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வராஜ், ராஜேந்திரன், பழனியாண்டி, சின்னடைக்கன், சீரங்கன், பேரூர்க் கழகச் செயலாளர் நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பள்ளி மாணவர்களுக்கு சத்துணவில் முட்டை வழங்குவதில் குழப்பம்!

காரணமான அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை தேவை!

தமிழ்நாடு உயர்நிலை – மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் ஆ.மலைக்கொழுந்தன் அறிக்கை!

கரூர், செப். 29-

தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி பட்ட தாரி ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் ஆ.மலைக் கொழுந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சத்து ணவுத் திட்டத்தில் மாண வர்களுக்கு முட்டை வழங் குவது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. இதற்கு முன்பு இதுபோன்ற குழப்பம் எப்போதும் ஏற்பட்ட தில்லை.

ஆனால், 25.09.2026 அன்று மட்டும், சில மாவட்டங்களில் மாணவர் களுக்கு சத்துணவுடன் முட்டை வழங்கப்பட் டுள்ள நிலையில், சில மாவட்டங்களில் மாணவர் களுக்கு முட்டை வழங்கப் படாமல் சத்துணவு மட் டும் வழங்கப்பட்டுள்ள தாகத் தகவல்கள் வெளியா கியுள்ளன.

ஒரே மாநிலத்தில், ஒரே அரசு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப் படும் உணவில் இவ்வாறு மாவட்ட வாரியான வேறு பாடு ஏற்பட்டிருப்பது மிக வும் அதிர்ச்சியளிக்கிறது. இதனால் மாணவர்கள் மற் றும் பெற்றோர்களிடையே குழப்பமும் ஏமாற்றமும் ஏற்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு வழங் கப்படும் முட்டை என்பது கூடுதலாக வழங்கப்படும் சாதாரண உணவுப் பொருள் அல்ல. அது மாண வர்களின் உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து தேவைக்கு முக்கியமான உணவாகும்.

எனவே, 25.09.2026 அன்று ஏற்பட்டுள்ள இந் தக் குழப்பத்திற்கான உண் மையான காரணத்தை அரசு உடனடியாக கண்ட றிய வேண்டும். எந்த அதி காரியின் உத்தரவு அல்லது நிர்வாகத் தவறின் காரண மாக இந்த நிலை ஏற்பட் டது என்பதை உரிய விசா ரணை மூலம் கண்டறிய வேண்டும்.

மேலும், இந்தக் குழப் பத்திற்கு காரணமான அரசு அதிகாரிகள் அல்லது அலுவலர்களின் நடவ டிக்கை கண்டறியப்பட்டு, தவறு உறுதி செய்யப்பட் டால் அவர்கள்மீது விதிமு றைகளின்படி உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் என எங்கள் சங்கத்தின் சார் பில் வலியுறுத்திக் கேட் டுக்கொள்கிறோம்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற குழப்பம் ஏற் படாத வகையில், தமிழ் நாடு முழுவதும் மாணவர் களுக்கு வழங்கப்படும் சத்துணவு மற்றும் முட்டை வழங்கும் நடைமுறை ஒரே சீராகவும் தடையின் றியும் நடைபெறுவதை அரசுஉறுதி செய்ய வேண்டும்.

மாணவர்களின் ஊட் டச்சத்து தொடர்பான அரசு திட்டங்களில் நிர்வா கக் குழப்பம் ஏற்படுவது ஏற்றுக்கொள்ள முடியா தது. 25.09.2026 அன்று ஏற் பட்டுள்ள இந்தக் குழப்பத் திற்கு காரணமானவர்கள் யார் என்பதை அரசு கண் டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி பட்ட தாரி ஆசிரியர் சங்கத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட் டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், எதிர்க்கட்சித் தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடும், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் அறிவுறுத்தலின்படியும், மாநில இளைஞரணி துணைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பி.எஸ். சீனிவாசன் வழிகாட்டுதலோடு, குண்டடம் ஒன்றியம் நந்தவனப்பாளையம் ஊராட்சியில் உள்ள 24வது வாக்குச்சாவடியில் குண்டடம் ஒன்றியத்திற்கு உட்பட்ட இளைஞரணி நிர்வாகிகளுடன் இணைந்து நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட துணை அமைப்பாளர் கார்த்திக், திருப்பூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலகிருஷ்ணன், நகர மாணவர் அணி துணை அமைப்பாளர் கிஷோர் மற்றும் குண்டடம் ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் , வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி குண்டடம் மேற்கு ஒன்றியம், பு.கொத்தனூர் ஊராட்சி பகுதியில் ஒன்றிய செயலாளர் சு.சந்திரசேகர், பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன் முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மஞ்சனூர் ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), கூரியனூர் ஆ.சந்திரன் (குளித்தலை) ஆகியோர் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் ஒன்றிய செயலாளர்கள் பி.தியாகராஜன், சி.அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் தர்மன், இ.ஜாபர்வுல்லா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ராமர், ஒன்றிய முன்னாள் பெருந் தலைவர் தோகமலை கண்ணன், ஒன்றிய கவுன்சிலர் பிரியா கருணாகரன், மாவட்ட துணை செயலாளர் வி.பல்லவி ராஜா குளித்தலை நகரத் துணைச் செயலாளர் கே.எம்.செந்தில்குமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எ சக்திவேல் மெடிக்கல் மாணிக்கம் ஒன்றிய மாணவரணி என்.சி.ரமேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

வ.எண்	நேரம்	இடம்
1.	காலை 9.30	கன்னிவாடி
2.	காலை 10.15	வடுகபட்டி
3.	காலை 11.00	கணபதிபாளையம்
4.	காலை 11.45	தளவாய்பட்டணம்
	மதிய உணவு இடைவேளை	
வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 3.30	பெரியார் சிலை
2.	மாலை 4.15	அரசு மேல்நிலைப்பள்ளி (கோட்டைமேடு)
3.	மாலை 5.00	பூளவாடி ரோடு கார்னர்

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

விஜய் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராகி விட்டனர்!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!

சென்னை, செப்.29-

சட்டப்பேரவை முன் னாள் தலைவர் மு.அப் பாவு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் த.வெ.க. கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு போதைப் பொருள் பயன்பாடு, ஆதாயக் கொலைகள், பெண்க ளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், கட் டப்பஞ்சாயத்துகள் மற் றும் மாமூல் கேட்பது போன்றவை அதிகரித்தி ருப்பதும் அதன் பின்னணி யில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருப்பதும் தகவல் அறியும் உரிமை பெறும் சட்டத்தின் கீழ் அம்பலமாகி வந்ததை அறிந்த முதலமைச்சர் ஜோசப் விஜய் சட்டம் ஒழுங்கு குறித்து தகவல் அறியும் உரிமைச்சட்டத் தின் கீழ் தகவலைப் பெறு



வதிலிருந்து விலக்கு அளித்து அதிரடி அரசாணை (எண்: 404/21.09.2026) பிறப்பித்திருப்பது பயமா? அல்லது சர்வாதிகாரத்தின் தொடக்கமா CM Sir?

தனது ஆட்சி குறித்த அவலங்கள் வெளியே தெரிவதையும், பல்வேறு குற்றங்களுக்கு பின்னணியில் தவெக நிர் வாகிகளுக்கும், ஆந்திர ரெட்டி கேங்குக்கும் தொடர்பு இருப்பது வெளியே தெரிந்துவிடா மல் தடுக்கவா இந்தப் #படுபாதக செயலை செய் திருக்கிறீர்கள் CM Sir?.

மக்களால்தான் ஜனநா யகம் மக்களுக்காகத்தான் ஆட்சி என்பதை உறுதிப்ப டுத்துவதற்காக இந்தியா வுக்கே முன்னோடியாக 1997-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட் டத்தை கொண்டு வந்து, அதே ஆண்டு மே 4-ஆம் தேதி ஆளுநரின் ஒப்பு தலை பெற்று நடைமுறை படுத்தி எட்டு ஆண்டு களுக்குப் பிறகு தான் ஒன்றிய அரசு அது போன்ற ஒரு சட்டத்தை கொண்டு வந் தது உங்களுக்கு தெரியுமா CM Sir?.

அனைத்து மக்களும் அரசின் அனைத்துச் செயல்பாடுகளையும் அறி யும் வகையில் கலைஞர் கொண்டு வந்த சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலும்,தனது காட் டாட்சித் தர்பார் குறித்து மக்கள் தெரிந்து கொள் வதை தடுக்கவும் கொண் டுவந்துள்ள இந்த ஜனநா யக படுகொலைச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறாவிட்டால் ஏற்கனவே கொதித்துப் போயிருக்கும் இளைஞர்க ளும், மக்களும் வீதியில் இறங்கி போராடி உடனடி யாக உங்கள் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப தயாரா கிவிட்டார்கள் CM Sir.

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள் ளார்.

ஜெம் வீரமணி வழக்கில் 70 நாட்கள்

குற்றவாளியை கைது செய்யாமல் பாதுகாத்தது யார்? இடைப்பட்ட காலத்தில் நடந்த பேரம் என்ன?

'டம்மி' முதலமைச்சருக்கு தி.மு.க.வின் ஐ.டி. பிரிவு கேள்வி!

சென்னை, செப்.29-

ஜெம் வீரமணி வழக்கில் 70 நாட்கள் குற்றவாளியை கைது செய்யாமல் பாதுகாத் தது யார்? இடைப்பட்ட காலத்தில் நடந்த பேரம் என்ன? என்று 'டம்மி' முத லமைச்சருக்கு தி.மு.க.வின் ஐ.டி. பிரிவு கேள்வி எழுப்பி யுள்ளது.

தி.மு.க. ஐ.டி.விங்கின் வலைதளப்பதிவு வருமாறு:-

ஜெம் கிரானைட் வீரம ணியின் போக்சோ வழக் கில், நீதிமன்றம் தலையில் குட்டிய பிறகுதான் தவெக அரசுக்கு ஞானோதயம் வந் ததா? "நாங்கள் தான் நடவ டிக்கை எடுத்தோம்" என்று மார்தட்டும் டம்மி முதல் வரை நோக்கிச் சில நேரடி யான கேள்விகள்:

மே 10ம் தேதியே த.வெ.க. அரசு பொறுப் பேற்றுவிட்டது. ஜூன் 19 அன்று ஜெம் வீரமணி வழக்கு விசாரணைக்கு வந்த போது, வழக்கின் முடிப்பு அறிக்கையை (FAD Report), "மேல்விசாரணை தேவை" என்று கூறித் திரும் பப் பெற அரசுத் தரப்பு வழக்கறிஞருக்கு (PP) தவெக அரசு ஏன் உத்தரவி டவில்லை?

ஜூன் 19 அன்று, உங்கள் காவல் துறை, வழக்கை முடித்து வைப்பதாக கோரி யதை ஏற்க மறுத்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி, அதைத் தூக்கி யெறிந்துவிட்டு மேல் விசாரணைக்கு உத்தர விட்டார்.

குற்றவாளிக்கு எதிரான வீடியோ ஆதாரங்கள் மிகத் தெளிவாக இருந்தும், நீதி மன்றம் குட்டு வைத்த ஜூன் 19 அன்றே வீரம ணியை உடனே கைது செய் யாமல் தடுத்து நிறுத்தியது யார்?

ஜூன் 19 முதல் ஜூலை 20 வரை உங்கள் ஆட்சியில் இந்த வழக்கில் எந்த முன் னேற்றமும் இல்லை. இதன் மர்மம் என்ன?

ஜூலை 20ம் தேதி நடந்த அடுத்த விசாரணை யின் போதும் நீதிமன்றத்தில் ஆஜராகி, "விசாரணை இன் னும் நிலுவையில் உள்ளது" என்று இழுத்தடித்தது உங் கள் காவல் துறை.

ஜூன் 19ல் நீதிபதி உத்த ரவிட்ட பிறகும், ஆகஸ்ட் 29 வரை குற்றவாளி யைக் கைது செய்யாமல் 70 நாட் களாகப் பாதுகாத்தது யார்? இடைப்பட்ட காலத்தில் நடந்த பேரம் என்ன?

உடனடியாக நடவ டிக்கை எடுத்திருக்க வேண் டிய காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் உள் துறை அமைச்சர் வேறு யாருமல்ல, இதே 'டம்மி' முதலமைச்சர் விஜய்தான்!

அப்படியானால், ஒரு பாலியல் குற்றவாளியைக் காப்பாற்ற முதலமைச்சரே உத்தரவிட்டாரா?

நீதிமன்றம் குட்டு வைத்து, வேறு வழியில்லா மல் ஆகஸ்ட் இறுதியில் கைது செய்துவிட்டு, இப் போது ஏதோ நீங்களே கண் டுபிடித்துத் தண்டித்ததைப் போல இடைத்தேர்தல் மேடையில் 'கிரெடிட்' திருட உங்களுக்கு வெட்க மாக இல்லையா மிஸ்டர் விஜய்?

இந்த வழக்கையே வரப்போகும் இடைத்தேர் தலுக்கு ஒரு மலிவான Political Toolkit ஆகப் பயன் படுத்திப் பொய் பிரச்சாரம் செய்ய உங்களுக்கு மன சாட்சியே இல்லையா?

ஒரு போக்சோ வழக்கில் நீதிமன்றத்தின் உத்தரவால் நடக்கும் விசாரணையைத் தன் சாதனையாகக் காட் டிக்கொண்டு, தேர்தல் ஆதாயத்திற்கா கப் பெண்க ளின் பாதுகாப்பைப் பண யம் வைக்கும் அளவிற்குத் தவெக ஆட்சி எவ்வளவு கேவலமான நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளது என்பதைத் தமிழ்நாடு மக்கள் பார்த் துக்கொண்டுதான் இருக்கி றார்கள்.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங்கின் வலைதளப்பதிவில் கூறப்பட்டுள்ளது.

தட்டாஞ்சாவடி தொகுதியில்

தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து வாக்குச்சேகரிப்பு!

புதுவை தி.மு.க. - எம்.எல்.ஏ.க்கள் வீடு, வீடாகச் சென்று தீவிர பிரச்சாரம்!

புதுச்சேரி, செப். 29-

தட்டாஞ்சாவடி தொகுதி தி.மு.க. வேட்பா ளர் சேது என்கிற சேதுசெல் வம் அவர்களை ஆதரித்து புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத் ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட் டச் செயலாளர் மருத்துவர் இரா. இலட்சுமணன் எம். எல்.ஏ., காலாப்பட்டு சட்ட மன்ற உறுப்பினர் அ. செந் தில் (எ) ரமேஷ், வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிடமணி புதுச்சேரி மாநில கழக நிர் வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள், நிர்வாகி கள் இணைந்து தட்டாஞ் சாவடி தொகுதிக்கு உட் பட்ட கெங்கையம்மன் கோவில் வீதி, மாரியம்மன் கோவில் வீதி, அய்யனார் கோவில் வீதி பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

கெங்கையம்மன் கோவில் வீதி, மாரியம்மன் கோவில் வீதி பகுதிகளில் வாடகை வீட்டில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா அல்லது அடுக்குமாடி குடியிருப்பு இந்த அரசை வலியுறுத்தி பெற்றுத்தருவார். 50 வரு டங்களுக்கும் மேலாக கோவில் மானிய நிலங்க ளில் வீடு கட்டி குடி யிருப் பவர்களுக்கு தீர்வு காண வும், சுகாதாரமற்ற குடிநீர் பருகுவதால் இப்பகுதியில் உள்ள குழந்தைகள், பெரிய வர்களுக்கு ஏற்படும் உடல் பாதிப்புகளில் இருந்து விடு விக்க குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுகா தாரமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பார். தடையற்ற மின்சாரம், விடு பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு, இளைஞர்களின் தேவைக் காக விளையாட்டு மைதா னம் என இப்பகுதி மக்க ளின் அடிப்படை வசதி களை மேம்படுத்த பாடு படும் தி.மு.க. வேட்பாள ருக்கு உதயசூரியன் சின்னத் தில் வாக்களியுங்கள் என்று வாக்களர்களிடம் துண்டு பிரசுரம் வழங்கி வாக்கு சேகரித்தனர்.

வாக்கு சேகரிப்பின்போது, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் கண்ணப்பன், கண்ட மங்க லம் சேர்மன் வாசு, பொதுக் குழு உறுப்பினர் தங்கவேலு, இந்திரா நகர் தொகுதி செய லாளர் ராதாகிருஷ்ணன், தொகுதி நிர்வாகிகள் ஏழு மலை, அருண்குமார் உள் ளிட்ட பலரும் உடனிருந்து வாக்கு சேகரித்தனர்.